கல்வெட்டு

421



தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் காலாண்டு இதழ்

இதழ் 10 ★ நள ஆண்டு ஆடித் திங்கள் ★ விலை ரூ. 1-50

1977

COMPUTATIONAL ANALYSIS OF TAMIL INSCRIPTIONS

NOBORU KARASHIMA
Associate Professor of South Asian History, University of Tokyo

The importance of the computer in modern science and technology is undeniable. Even in the field of social sciences and the humanities, the advantage of the use of the computer has already been understood. For example, scholars have been using the computer in the attempt to decipher the Indus Valley script. I have myself been using it to better understand the socio-economic history of South India. The use of the computer in the social sciences and the humanities is mainly for statistical analysis. My use of the computer has been to analyse statistically the data obtained from the Tamil inscriptions of the Chola period which are large in number.

Now, the importance of the inscriptions as a source material for the study of Indian history is well understood by the people. I was glad to read in the newspapers that the Tamilnadu State Department of Archaeology has given instructions to temple authorities for the protection of inscriptions from the application of lime-wash, oil, etc., over the inscriptional surface.

In the first stage of inscriptional study, which started during the last century, primary importance was given to the date portion of inscriptions. In the second stage, attention was focussed mainly on the Prasasti, on the eulogy of the king. Through those studies, scholars reconstructed the outline of history. Then, in the third stage, scholars became aware of the importance of inscriptions as source material for the study of socio-economic conditions of the past. For example, Professors Krishnaswami Iyengar and K. A. Neelakanta Sastri started such study and this trend of study continues today.

However, the socio-economic studies that have been carried out utilising inscriptions are quite unsatisfactory for the simple reason that their mode of use of inscriptions is quite arbitrary. One scholar picks out from numerous inscriptions a few inscriptions which are favourable to his view-point, while another, taking a different stand-point, selects inscriptions favourable to his own view. The argument remains essentially

arbitrary and in many cases we do not know which is true or nearer the truth.

What then is necessary is the application of statistical methods and that is the method I have been using for the analysis of Chola inscriptions for these several years. I will give you two examples of my study. One is the study carried out several years ago in Mysore in collaboration with Mr. B. Sitaraman, a Deputy Superintending Archaeologist, Archaeological Survey of India, a study of revenue terms which appeared in the Chola inscriptions. What we did was to collect all the revenue terms from the published Chola inscriptions and analyse them statistically. We collected more than 300 revenue terms; we then examined the chronological and topographical distribution of the terms whose appearance is frequent. By that method, we were able to find the specific distribution patterns for some terms. Seven terms appeared throughout the Chola times and throughout the country. But the remaining 20 terms appeared only for a limited locality. The seven terms which appeared for all the periods and localities must have had basic importance for Chola revenue policy. The 20 terms which appeared only for some limited period or locality do not seem to have had the same importance. However, they seem to reflect some political events or economic conditions specific to the period or locality. In that way, by the application of statistical methods we were able to move towards evolving scientific guidelines for the study of Chola revenue administration.

Another work employing the statistical method is in progress in Tokyo, with Mr. Y. Subbarayulu, Lecturer in Ancient History, Madurai University, as my collaborator. This is a statistical study of names in Tamil inscriptions. Our work is to collect all the names and designations from the published Chola inscriptions and to analyse them statistically; and also to compile a concordance of those names and designations. This project, organised by me at the National Inter-university Research Institute of Asian and African Languages and Cultures in Tokyo, is big one and last year we spent approximately 6,000 dollars on it. Mr. Subbarayulu's work in Tokyo for two years was made possible by the grant of the Japan Society for the Promotion of science. My present trip to India has been made possible by a grant of the Mitsubishi Foundation. Thus in Japan, both the Government and a private fund are subsidising this Tamil study project.

The compilation of a concordance using the computer is now in its final stage and we hope to publish it by the end of 1977. We listed 9,950 names collected from 3,500 inscriptions and more than 30,000 computer data cards have been prepared. This is the index portion of

the names, arranged in Tamil alphabetical order, and this is the basic data portion of the concordance.

For the statistical analysis of the names and designations also, we are going to use the computer. We have already made a preliminary analysis, using hole-sort cards.

The purpose is to clarify the administrative and social system of the period which is little known, owing to a lack of proper documentary material other than inscriptions. We expect that when we collect all the designations that relate to the administration and examine them statistically, we could get some idea of the Chola administrative system.

I shall give you two examples of the results of our preliminary analysis. One is the analysis of the term, '*Nakka*'. We examined the chronological and the topographical distribution of the term '*Nakkan*' from all the inscriptions but one (in which the term '*Nakkan*' occured about 400 times as a part of the names of dancing girls) and discovered a striking distributional pattern:

	I	II	III	IV
Thanjavur	83	14	8	1
Tiruchirapalli	52	14	1	0
South Arcot	8	8	1	1
North Arcot	4	3	0	0
Chingleput	2	0	0	0
Chittoor and Nellore	0	1	0	2

The Choḷa period is divided into four periods starting from 850 A.D., each roughly covering hundred years. The terms appear almost exclusively in Cholamandalam, which was the real central part of the Chola empire and mostly in the periods I and II. The sudden decrease of its appearance in the periods III and IV must reflect some political event or social change. If we consider the fact that the word '*Nakkan*' is linked by many scholars with the Sanskrit '*Nagna*,' an epithet of Siva, this sudden decrease suggests the viscissitudes of Saivaism during the Chola time. We cannot offer yet a definitive interpretation. However, we have discovered, through the application of statistical methods, a fact which was not yet noticed before, which deserves to be studied.

The other example is the analysis of the terms, '*Madhyastha*' and "*Nāḍāḷvān*". The word '*Madhyastha*' appears in the Chola inscriptions in most cases as meaning "secretary" or "registrar" of the village assembly, called the Sabha or Ūr. We proceeded on the basis that the more vigorous the autonomous activities of the village assembly, the more

we might expect to come across this term. In this sense, we consider this term an indicator of the autonomous activity of the village assembly. The other term, '*Nāḍāḷvān*', can be interpreted as signifying the one who rules the nadu (territorial division). If we consider the fact that the person who had this title often had other important titles such as '*Arayan*', "*Pēr-arayan*", and so on, we may be able to regard "*Nāḍāḷvān*" as the local chief or lord. If so, his appearance is incompatible with the existence, or at least with the vigorous activities, of the autonomous village assembly.

Here is the chronological distribution pattern of these two terms for all the districts:

	I	II	III	IV
Nadalvan	0.0	0.6	0.7	1.9
Madhyastha	2.7	2.2	0.6	0.5

What you will see here is the clear decreasing tendency of 'Madhyastha' with the advent of time and by contrast, the equally clearer increasing tendancy of 'Nadalvan' towards the end of Chola rule. Reading this distribution pattern considering the social implication of these terms, we propose the following conclusion. An important change the agrarian order took place towards the end of Chola rule. It seems that the village assembly lost the right of autonomy which it had enjoyed earlier to the local chiefs who gained power towards the end of the period.

May we venture to suggest from this the emergence of a feudal system towards the end of the Chola rule?


These are just two examples of the results of our analysis; we are obtaining other interesting types of information. Statistical methods have some limitations and we must avoid a mechanical application of statistical methods to the study of inscriptions. However, as I have shown you today there is much useful undiscovered information that we can obtain from inscriptions by the application of statistical methods. We can discover facts so far unknown or facts which the individual inscription cannot tell us. Herein lies the necessity of statistical study. If we consider the fact that only one-third of the Chola Inscriptions copied have been published, the importance of statistical study really comes to the fore.

When the computer has, as I said earlier, becomes indispensable in modern sciences and technology, why should it not, in the field of social sciences and humanities as well? I wish to point out that inscriptional study is now entering the computer age.

A PANDYA CHALUKYA COIN

Dr. R. Nagaswamy

There is an interesting Pandya coin issued by one Sundara Pandya. It bears on the obverse two fish and a sceptre with the legend Sundara Pāṇḍya on top written in Tamil characters. On the reverse is a figure of a boar facing right with sun and moon shown above. Also are seen *sankha* and *chakra* in small size on the same side.



சுந்தரபாண்டியன்

Two major dynasties used the emblem of boar, *Varāha* on their flags, seals, coins etc., and they were the Western Chalukyas and the Vijayanagar rulers. The Vijayanagar emblem will have a sword in addition to the boar. It is the Western Chalukyas-both the early Chalukyas of Badami and later Chalukyas of Kalyan who had the boar emblem with sankha and chakra and also sun and moon. This royal emblem occurs in many monuments and copper plate seals of the Chalukyas. Obviously the boar emblem, found on the Pandya coin is that of the Western Chalukyas.

Writing on this coin Sir. T. Desikachari states "The Pandyan coins with the boar on the obverse have always the legend Sundara on the reverse. There is no clue whereby we can attribute them to any particular reign. The boar emblem was probably assumed on an inter marriage between the Chalukyas and Pandyas or on a conquest of the Chalukyas by the Pandyas". (South Indian Coins p. 162).

On paleographical grounds the coin is to be assigned to 11th or 12th cent. A.D. The Pandyas of this period were reduced to absolute

submission by the imperial Cholas. There was no Pandya who could achieve a victory against the mighty Chalukyas. Except Sundara Pandya no other Pandya ruler has issued coins bearing the boar emblem. We have therefore to look for a Sundara Pandya of 11th or 12th century who was atleast powerful to challenge the authority of the Cholas and issue coins in his own name and imprint the boar emblem of the Chalukyas. We have only one Sundara Pandya in this period who rose to prominence and shook of the Chola overrule for some time and he was a contemporary of Rājadhirāja I, in 11th century A.D.

When Rājendra Chola I, conquered the Pandyas, he dismissed the earlier tradition of giving back the conquered country to its original ruler, but instead appointed his own son under the title of Chola-Pandya as its ruler. Sundara Chola Pandya was the first such ruler appointed by Rājendra I some time in 1016 A.D. He ruled atleast for 23 years, upto about 1040 A.D. His inscriptions are found upto that period in the Southern Tamil country. Immediately after this period we get a Sundara Pandya suddenly shooting to prominence.

Before we take up the study of this Sundarapandya, an inscription in Cholapuram (Kottaru) in Kanyakumari district needs special mention. The inscription is dated circa 1027 A.D. in the reign of Sundara-Chola Pandya. It records the gift of a lamp by one Chalukya ruler Vishnu-vardhana Vijayāditta Vikkiyannan. Prof. K. A. Nilakanta Sastri has taken him to be an Eastern Chalukya Prince (Cholas P. 204). There is nothing in the inscription to suggest that he was an Eastern Chalukya Prince. The inscription records,

> ராஜேந்திர சோழீச்சுரமுடையார்க்கு சர்வ லோகாச்ரய விஷ்ணு வர்த்தன மஹாராஜா சாளுக்கி விஜயாதித்தன் விக்கியணன் வைத்த நொந்தாவிளக்கு
>
> (கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் தொகுதி I. 1968/265; T. A. S. VI-8)

The inscription records the name as Sarvalokāsraya Vishnuvardhana Mahārāja also known as Chalukya Vijayāditta Vikkiyannan. The names Vijayāditta, Vishnuvardhana and Vikkiyanna occur for the Western Chalukyas of this period. The sons of Somesvara I, who fought against Rājadhirāja Chola were Vijayāditta and Vikki. In all probability the Sarvalokāsraya Vishnuvardhana of the Cholapuram record was a Western Chalukya Prince.

After the defeat of Chalukya Jayasimha at the hand of Rājendra I in Musangi (about 1020 A.D.) there was comparative peace between the Chalukyas and Cholas till 1042 when Somesvara-I ascended the throne.

This is the period when we get the inscription of Chalukki Vishnuvardhana in Kanyakumari district, the traditional territory of the Pandyas. The presense of the Chalukya as a friend in the Pandya region is thus significant with reference to our coin.

In 1046 we find a terrific battle fought by Rajadhiraja I against three Pandya rulers in this region. They were Mānābharana, Sundarapandya and Vīra Pandya. The first and the last were beheaded by Rajadhiraja but Sundrapandya escaped to Mullaiyur. Nilakanta Sastri has rightly suggested that Sundara Pandya was the Chief ruler at that time.

In all probability, the Chalukya Prince Vishnuvardhana Vijayāditta, who was living in the Pandya country during that period, established some relationship with Sundara living in obscurity. The Chalukya-Pandya alliance led Sundara Pandya to rise in revolt against the Cholas as soon as Chalukya Somesvara ascended the throne in 1043-1044. Sundara Pandya should have issued this coin to mark his alliance with the Chalukyas. The coin bearing the name Sundara Pandya and fish emblem on one side and the Chalukyan boar on the other may there fore be taken as issued in circa 1045 A.D. Thus the coin throws interesting light on Chalukya-Pandya relationship in 11th century AD.

பட்ட வாய்த்தலை

திருச்சி மாவட்டத்தில் "பட்ட வாய்த்தலை" என்று ஓர் ஊர் இருக்கிறது. இப்பெயர் எவ்வாறு வந்தது என்பது குறித்துப் பல கருத்துகள் உண்டு. வரலாறு என்ன கூறுகிறது? 'வெட்டுவார் நாயன்' என்ற ஒருவன் மூன்ரும் ராஜராஜன் காலத்தில் வாழ்ந்தான். அவன் முசிறியில் செல்லும் வாய்க்காலுக்கு ஒரு வாய்த்தலை கல்லால் கட்டுவித்தான். வெட்டுவார் நாயன் வாய்த்தலை' என்பது பேட்டை வாய்த்தலை என்று ஆகி பின்னர் 'பட்ட வாய்த்தலை' என்று மறுவி விட்டது போலும்! இதோ கல்வெட்டு

> திரிபுவநச்சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜ தேவற்கு யாண்டு ௪ வது வடகரை ராஜராஜ வளநாட்டு முசிறியான மும்முடிச்சோழப் பேட்டையில் தலை பெற்ற கடைகானகமான கரிகால பேராற்று நிலவாளை வெட்டுவார்நாயன் வாய்த்தலை கல்லால் செய்வித்தான் வாண கோவரையர் சாமந்த முதலிகளில் மணலூருடையான் இராமன் சோழகோநான வெட்டுவார்நாயன்.

இராமண்ண நாயக்கன் காசு


நடன. காசிநாதன்

தமிழகத்தில் பல இடங்களில் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய பகுதிகளை ஆண்ட நாயக்க மன்னர்கள் வெளியிட்ட காசுகள் காணப் படுகின்றன. பல காசுகள் எந்த நாயக்க மன்னரால் வெளியிடப் பெற்றவை என்று அறிய முடியாமல் இன்னமும் இருந்து வருகின்றன.

அடையாறைச் சேர்ந்த ஒருவர் ஒரு செப்புக் காசைத் தந்தார். அக்காசில் முன்புறம் "ாமண்ணன்" (ராமண்ணன்) என்று எழுதப் பெற்றும், பின்புறத்தில் "அமர்ந்த நிலையில் நரசிம்மர் உருவம்" பொறிக்கப் பட்டும் உள்ளது. பின்புறம் சற்றுக் குழிவாகக் காணப் படுகிறது. "ராமண்ணன்" என்பது மூன்று வரிகளாக எழுதப்பட்டிருக்கிறது. எழுத்தமைதி கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகத் தோன்றுகிறது.



ாமண்ணன்



நரசிம்மம்

தமிழ் நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தருமபுரி மாவட்டம் கொத்தூரிலிருந்து படியெடுத்துள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் இராமண்ணன் என்ற நாயக்க மன்னன் ஒருவன் கி. பி. 1511-ல் ஒசூர்ப் பகுதியை ஆட்சி செய்து வந்ததாகத் தெரிகிறது.[1] இம்மன்னனின் தந்தை அங்கப்ப நாயக்கர் என்று குறிப்பிடப்படுகிறது.

அக்கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்த ௧௪௩௩ செல்லாநின்ற ப்ர
2. ஜாபதி வருஷத்து ஆவணி ம ௨ தி ஸாவ-ஜஸ-வக வத்தி ஸ்ரீ போ
3. ஜ்ஜல வல்லாள தேவர் வாளுக்குத் தோளுக்கு நந்றாக ஸ்ரீஹொய்
4. ஸாமித்தம் அங்கப்ப நாயக்கர் மகன் இராமண்ணனு . . . . .

என்று செல்கிறது.

இராமண்ணன், போசள மன்னன் வீரவல்லாள தேவருக்கு அடங்கிய சிற்றரசனுக இருந்திருக்கிறுன் என்பது புலப்படுகிறது. அவனும் மாசந்த நாட்டுப் பெரிய நாட்டாரும், எதிரிலிச் சோழ நாட்டு நாயகஞ் செய்வாரும் ''அடிக்கீழ்த்தளத்து அய்ஞ்னூற்றுவற்கும், அத்திசயற்கும், நாயநாற்கும், ஆண்டாற்கும் செல்ல நாயனுக்கும்'' அத்தியூர், தேனுழான் பள்ளம் ஆகிய இரண்டு ஊர்களேயும் சேர்த்து 'வீரவல்லாள பட்டணம்' என்று பெயரிட்டு கல்லு நாட்டித் தந்ததையும் இக்கல்வெட்டு குறிக்கிறது.

இக்கல்வெட்டின் மூலம் இராமண்ணன் ஓரளவுக்குத் தனிப்பட்ட அதிகாரம் வாய்ந்தவனுகக் காணப்படுகிறுன். எனவே அவன் தன் பெயரால் காசுகளேயும் வெளியிட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது. இராமண்ணன் என்று பெயர் பொறிக்கப்பட்ட இக்காசு இராமண்ண நாயக்கனுல் வெளியிடப்பட்டிருக்கலாம்.

இராமண்ணன் என்ற பெயரே அவன் ஒரு வைணவ பக்தன் என்பதைக் காட்டுகிறது. ஆகவே அவனது காசுகளில் திருமாலின் மற்ருெரு அவதாரமான நரசிம்மத்தைப் பொறித்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லே. அதோடு அவன் ஆண்ட காலத்தில்தான் விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரும் ஆட்சி புரிந்திருக்கிறுர். தென்னிந்தியாவில் வைணவ மதம் உச்சநிலே அடைந்தது இவர் காலத்திலேயாகும். எனவே அதன் காரணமாகவும் இவன் தனது காசுகளில் நரசிம்மர் உருவத்தைப் பொறித்து வெளியிட்டிருக்கலாம்.

---

1. தருமபுரி கல்வெட்டுக்கள், பொறுப்பாசிரியர்: டாக்டர் இரா. நாகசாமி 1974/7.

கல்வெட்டில் ஐம்பெருங் குழு

ஐம்பெருங் குழு, எண் பேராயம் என்பவை அரசனுக்கு உறுதுணே நின்ற அமைப்புகள் என்பது இலக்கியங்களிலிருந்து அறிந்த செய்தி யாகும். கல்வெட்டில் ஐம்பெருங் குழு ஒன்று குறிக்கப்படுகிறது. திருச்சி மாவட்டம் கரூரிலிருந்து மூன்று கல் கிழக்கே சாலே ஓரத்தில் இக் கல்வெட்டு உள்ளது. 1890-ல் படியெடுக்கப்பட்டது.

1 ஸ்ரீ கூற்ற ருதை கெல்லி நிறுவன் கள
2 கார்த்தி கோசமுடைக் கோசமு ஐம்பெருங் கு
முவு சங்கமும் இவை காத்தானடி என்தலே மேலின.

நந்தவனங்கள்

வெ. வேதாசலம், M.A., Dip. Epgy. & Arch.
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

நந்தவனம் என்பது முற்காலச் சோழர் கல்வெட்டுகளில் நந்தவானம் என்றே குறிக்கப்பெற்றுள்ளது.[1] தெங்கு, பனை, கமுகு, இலுப்பை போன்ற மரங்களும் மல்லிகை, இருவாட்சி, சண்பகம் போன்ற மணந்தரும் மலர்ச்செடிகளும் இங்கு வளர்க்கப்பட்டன. தெங்கு நந்தவனம்,[2] கமுகு நந்தவனம்,[3] பூ நந்தவனம்[4] எனப் பலவகைப்பட்ட நந்தவனங்கள் அக்காலத்து இருந்தன.

நந்தவனத்திற்குப் பதிலாகத் தெங்கு, மா முதலியன நின்ற இடத்தின் ஈட்டத்தைத் தோட்டம் என்றும் அழைத்தனர். மாந்தோட்டம்,[5] கமுகுத் தோட்டம்,[6] தெங்குத்தோட்டம்,[7] பூந்தோட்டம்,[8] இலுப்பைத் தோட்டம்[9] என்று இவை கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றன. இதேபோல் மா, பலா, வாழை போன்ற பயன்தரு மரங்கள் நிறைந்து நின்ற இடத்தைத் தோப்பு என்றும் கொல்லை என்றும் வேறு வகையாகக் கூறினர். கல்வெட்டில் இவை பிரமதேயத்துத் தோப்பு, ஆளியார் திருத்தோப்பு என்று குறிக்கப்பெறுகின்றன.[10]

தோற்றம்

நந்தவனங்கள் தெய்வங்களின் வழிபாட்டிற்காகவும், மக்களின் பயன்பாட்டிற்காகவும் தோற்றுவிக்கப்பெற்றன.

செம்பியன் சோழவரையன் எனும் ஓர் அதிகாரி முதல் பராந்தகன் காலத்தில் அய்யப்பாடி என்ற ஊரைத் திருத்தியமைத்தபோது அவ்வூரில் 'தெங்கும், தமனகமும், இருவாசியும், மருவும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், கமுகும், பனையும் உள்ளிட்ட பயன்தரு மரமும் நடவும், இடவும்' பட்டது.[11] பிரமதேயம், பள்ளிச்சந்தங்கள் ஏற்படுத்தியபோதும் அங்கு 'மருவும், தமனகமும், இருவாட்சியும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், தெங்கும், கமுகும் உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நடவும் இடவும்' பெற்றதைச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன.[12]

கோயில்கள் எடுத்தபோது திருமுற்றம், மடைவிளாகம் முதலியவற்றிற்கு நிலம் விடப்பட்டதுபோல் நந்தவனங்களுக்கும் நிலம் விடப்பட்டுப் பல நந்தவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன.[13] உத்தமசோழன் காலத்தில் அம்பலவன் பழலூர் நக்கன் விசயமங்கலத்து மகாதேவர்க்குக்

கற்றளி எடுப்பித்து விட்ட தேவதான நிலத்தில் நந்தவனமும் அமைத்தான் என்று ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. 'புன்செய்யும், மென்செய்யுமின்றிக் காடெழுந்து பாழ்கிடந்த' தேவதான நிலத்தில் திருநந்தவனம் அமைக்கப்பட்டதையும் கல்வெட்டுக் குறிக்கிறது.[15] தனிப்பட்டோர் சிலரும் அவர்களது நன்மைக்காக நந்தவனம் அமைத்திருக்கின்றனர். நரசிம்ம நாயக்கன் என்பவன் தனக்கும் தன் மாதா, பிதா உள்ளிட்டார் நன்மைக்குமாக திருவரங்கநாதனுக்குத் திருமாலே சாத்த திருநந்தவனம் விலேகொண்டு விட்டான்.[16]

நிலம்

தாவரத்திற்கு தக்கபடி நீர்நிலமாகிய நன்செய் நிலத்தும், ஊருணிக் கருகிலும்,[17] கார்மறு நிலத்திலும்,[18] புன்செய்யிலும்,[19] புன்செய்யும் மென்செய்யும் இன்றிப் பாழ்பட்டுக் கிடந்த நிலத்திலும்,[20] நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. பயிருக்குத் தக்கபடி தரம் வாரியாகப் பிரிக்கப்பட்ட நிலங்கள் இருந்தன. கமுகு நிலம்[21] என்றும், இலுப்பைக் கழனி என்றும், தெங்குக் கொடித் தோட்ட நிலம் என்றும், மாந்தோட்ட நிலம், பெரும் பூவும்,குறுவையும் விளேயும் நிலம் என்றும் இவை குறிக்கப்பெறுகின்றன.[23]

'கடலில் திரை ஏறி வாய் அருகு இல்லிபடும் இராவணன் மெய் வாயும் எழுந்து மணல் குன்றான நிலனும், பட்டினவர் குடியிருப்பான நிலம் முதலான நிலங்களேத் தவிர்த்து' பிற நிலத்தை தேர்ந்து அங்கு பனேயும் இலுப்பையும் இடப்பட்டதாம்.[24] பல இடங்களில் நிலந் திருத்தி நந்தவனப் பயிர் ஏற்றியதையும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. 'நந்தவனம் அமைப்பேன் என்று காடும் கள்ளியும் வெட்டி; மேடு பள்ளமும் ஒப்பித்து; நாலும் வேலியும் அமைத்து; நாறுபூத் திருப்பள்ளித்தாமம் மல்லிகையும், பெருஞ் சண்பகமும், சிறு சண்பகமும், இருவாசியும் உள்பட்டன மற்றும் எல்லா பூ மரமும், வைத்த நிலமும் வேலியமைத்து நீர் இறைத்துக் கன்று வைத்து[25] காடுவெட்டியும் காட்டை பறித்து களரும் சுடுகாடும் மேடும் பள்ளமும் பாடு பறிவரம்பிட்டு வெட்டி திருத்திப் பதினெட்டடிக் கோலால் பதினறுக்குப் பதினறு கொண்டது ஒரு மாவாக . . . . வழி கண்ணுறு சதுரம் கட்டி நன்செய், புன்செய் தோட்டங்களில் பயிர் செய்தும் பயிர் செய்வித்தும்'[26]

செங்கழுநீர், தெங்கு, கமுகு, பலா, வாழை போன்றவை தவிர மற்றவை புன்செய் பயிர்களாகக் கருதப்பட்டன.[27] நந்தவனத்திற்காகத் தானமாக விடப்பட்ட நிலம் நந்தவனப் புறம் எனப்பட்டது.[28]

உரிமை

தனியொருவருக்கும்,[29] தனிப்பட்டோர் சிலருக்கும்,[30] ஊரார்க்குரியதாகவும்,[31] பிரமதேசத்துச் சபைக்குரியதாகவும்,[32] நகரத்தார்க்குரிய

தாகவும்,[33] கோயிலுக்குரியதாகவும்[34] நந்தவனங்கள் இருந்தன. கல்வெட்டுகளில் அதிகமாக கோயிலுக்குரிய நந்தவனங்களே பேசப் பெறுகின்றன.

வரிகள்

பிரமதேயம், கோயில் முதலியவற்றிற்கு வரிகள் விதிக்கப்பட்டன. சில வேளைகளில் கோயிலுக்குரியதாக இருந்தாலும் அதை அளித்தோன் நந்தவனக் கடமை, குடிமை செலுத்த வேண்டியிருந்தது.[35] நந்தவனத்தைக் காப்பது போன்றவற்றிற்காக பாடிகாவலும், வெள்ளான் வெட்டியும்,[36] வேலிக்காசும்[37] வாங்கப்பட்டன. நந்தவனத்திலுள்ள மரங்களுக்கும், மலர்களுக்கும், மாவடை, மரவிறை, மரமஞ்சாடி, ஈழம் பூட்சி,[38] குவளைக்காணம்[39] என்று பல வரிகள் விதிக்கப் பெற்றன. கோயிலுக்குரிய நந்தவனத்தில் பணிபுரிந்தோர்க்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது[40]. எல்லா வகையான நந்தவனங்களையும் அரசின் சார்பில் கண்காணித்துக் கொள்ள ஊர்கள் தோறும் அக்காலத்தில் தோட்ட வாரியங்கள் இருந்தன.

நந்தவனக்குடிகள்

நந்தவனங்களில் பணிபுரிந்தோர் நந்தவனக்குடிகள் எனப்பட்டனர்.[41] நந்தவனக்குடிகள் கோயில் ஸ்ரீ காரியம் செய்கிற பெருமக்களில் ஒருவர்[42]. இவர்கள் நந்தவனம் செய்வார்.[43] நந்தவனம் உழப்பர்,[44] திருநந்தவனம் பயிர் செய்வார், நந்தவனம் பணி செய்யுமாள்[45] என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றனர். ‘நந்தவானம் இறைக்கும் அருந்தவத்தோர்’ என இவர்களை இராஜராஜனின் ஒரு கல்வெட்டு அழகாகக் குறிக்கிறது.[46] கோயில் அம்பலத்தில் ஊர்க் கூட்டம் கூடிய காலத்து இவர்களும் கூடினர் என்று மன்னர் கோயில் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[47]

நந்தவனத்தில் பல தரத்துப் பணியாட்கள் பணி புரிந்தனர். இதில் நந்தவனம் நாயகம் செய்வார் என்பவர்கள் நந்தவனத்தின் தலைமைக் கண்காணிகள். இவர்களுக்குக் கீழே இன்னும் பலர் பணி புரிந்தனர்[48]. இவர்கள் பேர் எனப்பட்டனர். இவர்களுக்கு உதவியாகக் கொற்றுக்கள் (சிற்றாட்கள்) இருந்தனர். முதலிருவரும் நிலைப்பணியினர். மூன்றாம் தரத்தர் அன்றாடம் வந்து பணிபுரிந்தோர் ஆவர்[49]. இவர்களைத் தவிர ‘நந்தவனம் இருக்கும் குடிகள்’ இருந்தனர்[50]. இவர்களும் நந்தவனத்திலேயே நிலையாகத் தங்கி நந்தவனப் பயிர்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள்.[51] ஒரு கல்வெட்டில் ‘திருநந்தவனம் இறைத்து நந்தவன மறச்சாதி செய்வார்’ என்று இவர்கள் குறிக்கப் பெறுகின்றனர்.[52]

ஊதியம்

இவர்களுக்கு ஊதியம் ஆயுள் முழுமையும் ஜீவிதமாக அனுபவித்துக் கொள்ள நிலமாகக் கொடுக்கப்பட்டது[53]. சில வேளைகளில் இது

காசாகவும், நெல்லாகவும், கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊதியம் ஆண்டு ஊதியமாகவும், திங்கள் ஊதியமாகவும், நாள் ஊதியமாகவும், இடத்திற்குத் தகுந்தாற் போல் பணியாட்களுக்கு ஏற்ருற் போல் கொடுக்கப் பட்டிருக்கிறது. நந்தவனக்குடிகள் இருக்க இடமும் உடுக்க உடையும் கொடுக்கப்பட்டது. இது கல்வெட்டுக்களில் 'இலக்கைக்கும் கொற்றுக்கும் முதலாக' என்று சொல்லப்படுகின்றது[54]

தில்லையில் இருந்த ஒரு நந்தவனத்தில் பணி புரிந்த நந்தவனம் நாயகம் செய்வார் இருவர்க்கும் பேர் முப்பத்து நால்வர்க்கும் மற்றும் இருவர்க்கும் ஆக முப்பத்தாறு பேர்க்குத் திருநாமத்துக் காணியாக முப்பத்து மா முக்காணி முந்திரிகைக் கீழரையே மும்மாவரை நிலம் ஊதியமாக விடப்பட்டது.[55] அவ்வூரிலேயே இருந்த மற்ருெரு நந்தவனத்தில் இருந்த நந்தவனம் நாயகம் செய்வார் ஐவர்க்கும் பேர் தொண்ணூற்றைவர்க்கும் ஆக நூறு பேர்க்கு இருநூற்று நாற்பத்தெழு அரைக்காணி நிலம் ஊதிய நிவந்தமாக விடப்பட்டது.[56] திருநந்தவனம் இறைப்பார் மூவர்க்கு நித்தம் குறுணியாக ஓராட்டைக்கு நெல் தொண்ணூற்ருறு கலம் கொடுக்கப்பட்டது[57] காஞ்சிபுரத்தில் இருந்த திருநந்தவனம் 'பயிற் செய்கிற ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வரதராசப் பெருமாள் கோயிலில் தினமும் அறுநாழி பிரசாதம்' அளிக்கப் பட்டது.[58]

பெயர்கள்

கண்டராதித்தன் திருநந்தவனம்,[59] செம்பியன்மாதேவி திருநந்தவனம்,[60] எதிரிலிச் சோழன் திருநந்தவனம்,[61] அவனி ஆளப்பிறந்தான் திருநந்தவனம்,[62] விக்கிரம கேசரி திருநந்தவனம்,[63] கேரளாந்தகன் நந்தவனம்[64] என்று அரசர்களின் இயற் பெயர்களிலும் பட்டப்பெயர்களிலும் அரசியர் பெயர்களிலும் நந்தவனங்கள் இருந்தன. உதையமார்த்தாண்ட மூவேந்த வேளாளுயின கருமுகைத் திருநந்தவனம்[65] ஜயங்கொண்ட சோழச் சருப்பேதியன் என்றும் அனந்தநாராயணன் என்றும் திருநாமத்தால் திருநந்தவனமாக நீரட்டிக் கொடுத்த திருநந்தவனம்[66] என்று அரசியல் அதிகாரிகளின் பெயர்களில் நந்தவனங்கள் இருந்தன. சீராமநம்பி தாயார் அம்சமான திருநந்தவனம்,[67] நிச்சயவாசகன் திருநந்தவனம்[68] திருத்தொண்டர் சிருடையான் திருநந்தவனம்,[69] அழகிய மணவாள நம்பி திருநந்தவனம்,[70] திருநிலை அழகியான் திருநந்தவனம்[71] என்று அடியார்களின் பெயர்களிலும் நந்தவனங்கள் இருந்தன. ஸ்ரீகயிலாசமுடையார் திருநந்தவனம்,[72] செம்பியன் ஈஸ்வரமுடையார் திருநந்தவனங்கள்[73] என்று கோயிலில் இருந்த இறைவன் பெயர்களில் திருநந்தவனங்கள் இருந்தன. தில்லையில் திருச்சிற்றம்பலமுடையார்க்கும் திருக்காமகோட்டமுடைய நாச்சியார்க்கும் தனித்தனியே அவர்கள் பெயர்களில் நந்தவனங்கள் இருந்தன.[74]

அரசர், அரசி முதலானோர் பெயரால் மட்டுமின்றி விளையும் செடி, மரங்கள் எவையோ அவற்றின் பெயரைக் கொண்டும் நந்தவனங்கள் அழைக்கப்பட்டன என அறிகிறோம்.

பூநந்தவனம்

இது பூந்தோட்டம் என்றும் அழைக்கப் பெற்றது.[75] கோயிலில் உறையும் தெய்வத்திற்குத் திருப்பள்ளித் தாமம் சாத்துவதற்காக விடப்பட்ட பூநந்தவனங்கள் அதிகமாகக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் படுகின்றன. இதற்காக விடப்பட்ட நிலம் திருமாலைப்புறம் எனப் பட்டது.[76] இதில் மல்லிகையும், பெருஞ் செண்பகமும், சிறுசெண்பகமும், இருவாட்சியும் மற்றும் எல்லாப் பூமரங்களும் வைக்கப் பெற்றன.[77] திருவிடைமருதூரில் மல்லிகை,[78] சிறுசெண்பகம்[79] இரண்டிற்கும் தனித் தனியாகத் தோட்டங்கள் இருந்ததைத் திருவிடைமருதூர்க் கல்வெட்டு தெரிவிக்கின்றது. முற்குறிப்பிடப் பெற்ற நந்தவனம் நாயகம் செய்வார், பேர், நந்தவனம் இறைப்பார் உடனாள் முதலியோர் இப்பூந்தோட்டங்களிலும் இருந்தனர். இவர் தவிர இங்குள்ள மலர்களைப் பறிப்பதற்குப் பணியாட்களும் இருந்தனர். இவர்கள் திருப்பள்ளித் தாமம் பறித்தெடுத்து பணியாற்றுவார்,[80] திருப்பள்ளித்தாமம் ஆக்கப் பறித்து ஒடுக்குவார்,[81] பூஇடுவான்,[82] என்று கல்வெட்டிலும் செப்பேட்டிலும் குறிக்கப் பெறுகின்றனர். இப்பணியில் 'மாணிகள்' அமர்த்தப்பட்டதை நங்கவரம் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[83] இவர்கள் பூக்களைப் பறித்து வந்து கோயிலில் இருந்த 'திருப்பூமண்டபத்தே' சேர்த்தனர். நாளொன்றுக்குப் பேர் ஒருவர்க்கு குறுணி நானாழி பூ அளந்து கொட்டினர்.[84] திருச்செந்தூர் சுப்பிரமணிய படாரர் கோயிலில் நாழி நறும்பூவினுக்கு ஒரு காசாக ஸ்ரீபள்ளித் தாமத்திற்கு நறும்பூ பத்து நாழி அமைக்கப் பட்டது.[85]

பூப்பறிப்பார் பூமண்டபத்தே கொண்டு வந்து அளந்து கொட்டிய பலவர்க்கத்துப் பூக்களை மாலையாகத் தொடுக்க அங்கு ஆட்கள் இருந்தனர்.[86] இவர்கள் திருப்பள்ளித் தாமம் தொகுப்பார் எனப் பட்டனர்.[87] இப்பணியில் தேவரடியாள் பெயர்களும் இருந்ததை மன்னார் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[88] நாளொன்றுக்குப் பூப்பறிப்பார் இவ்வளவு அளக்க வேண்டும் என்ற கணக்கிருந்தது போல் இவர்களும் இவ்வளவு திருமாலை கட்டித் தொடுக்க வேண்டும் என்ற கணக்கு இருந்தது.[89] முகவை மாவட்டத் திருப்புத்தூர் திருத்தளிப்படாரர் கோயிலில் திருப்பள்ளித் தாமம் ஆக்கிய விதம் மாலையின் நீளம், அகலம் மாலையின் எண்ணிக்கை முதலியவற்றுடன் அங்குள்ள கல்வெட்டில் 'இம் மாதேவர்க்குப் பள்ளித்தாமத்துக்கு பூப் பொன் காசின் வாய் இருவிரல் அகலத்து இரண்டிரண்டு நறும்பூ இட்டுத் தொடுத்தன இரு முழ நீளத்தன ஒரே வடமாக நியதி பதினைந்து இடுவதாக' என அழகாகக் கூறப் பெற்றுள்ளது.[90]

நீர்ப்பூக்கள்

நிலத்துப் பூக்கள் தவிர நீர்ப்பூக்களுக்கும் நிலம் தானமாக விடப் பட்டது. கோவிந்தம்புத்தூரிலிருந்த இறைவர்க்கு ஆராதனைக்குக் குவளை யிட நிலம் விடப்பட்டிருந்தது.[91] இறையிலியாக இல்லாத குவளை நிலத் தில் விளைந்த குவளைக்குப் பல்லவர் காலத்திலிருந்தே வரி விதிக்கப்பட்டு வந்தது.[92] (இது குவளைக்காணம் என்ற வரியாக முன்னரே குறிக்கப் பட்டுள்ளது) இதுதவிரச் செங்கழுநீர் மடுகளும்,[93] கமலம் மலரும் பாயலும்[94] இருந்தன என்று செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

தெங்கு நந்தவானம்

அக்காலத்தில் புதிதாக ஊரமைத்தபோது பயன் மரங்கள் பல மக்களின் பயன்பாட்டிற்காக நடவும், இடவும் பெற்றன. அவற்றில் தென்னையும் ஒன்று.[95] கோயில்களில் நித்திய வழிபாட்டிற்காகவும் விழாக்களின்போது சிறப்பு வழிபாட்டிற்காகவும் தென்னை பயிரிடப்பட்ட தோட்டங்கள் கோயில்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டன. தென்னை தெங்கு என்றும் தெங்கம் பிள்ளை என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப் படுகின்றது.[96] தில்லையில் தெங்கம்பிள்ளைகள் நிறைந்து நின்ற வீதி யொன்று விக்கிரம சோழன் தெங்குத் திருவீதி என்று அழைக்கப் பெற்றது.[97]

திருவண்ணாமலைக் கல்வெட்டு மங்கையர்க்கரசி என்ற பெண் நாற் பத்தெண்ணாயிரம் தெங்கம்பிள்ளைகள் நின்ற தோட்டத்தைத் தானமாகத் தந்ததைத் தெரிவிக்கின்றது.[98] திருவாடுதுறை மகாதேவர்க்கு எழுநூறு தெங்கம் பிள்ளைகள் வைத்த நந்தவானம் இருந்தது.[99] அவருக்கே ஆயிரம் தெங்கம் பிள்ளைகள் வைத்த நந்தவானத்தை சங்கயனெற்றி என்பவன் தானமாகத் தந்தான்.[100]

இத்திருவாடுதுறை மகாதேவர்க்கே தெங்கம் பிள்ளைகள் தவிர நூறு பனை மரங்கள் நின்ற தோப்பும் தானமாக தரப்பெற்றுள்ளது.[101] தனிப்பட்டோரால் சமயச் சார்பில்லாத இடங்களில் தெங்கும், பனையும் அக்காலத்தில் கள்ளிறக்குவதற்காகவும் அதிகம் பயிரிடப்பட்டன. கள் இறக்குவோர் ஈழவர் எனப்பட்டனர்.[102] தெங்கும், பனையும் பிரமதேயத்து தோட்டங்களிலும் பயிரிடப்பட்டன. இவற்றில் பொதுவாகக் கள் இறக்கத் தடையிருந்தது. ஆனல் பிரமதேயத்துக் குடிகளின் மனமின்றி பிரமதேய எல்லை உள்ளிட்ட நிலங்களில் தெங்கும், பனையும், ஈழவரேறப் பெறுதாராகவும்[103] என்று குறிக்கப் பெறுவதால் பிரமதேயத்துக் குடி கள் இசைந்தபோது வெளியிடத்திலிருந்து வந்து கள்ளிறக்கிச் செல்லலாம் என்ற விதிவிலக்கும் பொதுவாக அக்காலத்து இருந்தது என்றும் தெரி கிறது.

கமுகு நந்தவானம்

பாக்கிற்காக கமுகும் அக்காலத்து அதிகம் பயிரிடப்பட்டது. கோயில்களில் இது அடைக்காய் அமுது என்றழைக்கப்பெற்றது. வெற்றிலையோடு சேர்த்து திருவமிர்திலே நன்றாக இறைவனுக்குப் படைக்கப் பெற்றது. உத்தமசோழன் காலத்தில் ஆரூர்ச்சேரி மகாசபைப் பெருமக்கள் கமுகுத் தோட்டம் ஒன்றினை இறையிலியாக திருயோனத்துப் பரமசுவாமிக்கு விற்றுக்கொடுத்தனர்.[104] தில்லை திருச்சிற்றம்பலமுடையார்க்கும் திருக்காமகோட்டமுடைய நாச்சியார்க்கும் வேசாலிப்பாடிப் பற்றுப் பூவாலையில் கமுகு நந்தவனம் ஒன்று இருந்தது. இதில் நாயகம் செய்வார் பேர் தொண்ணூற்றைவருமாக நூறு ஆட்கள் பணிபுரிந்தனர்.[105] சிறுவாகூரில் வல்லவராயன் சோமதேவன் என்ற தனிப்பட்ட நபருக்குக் கமுகுத் தோட்டம் இருந்ததைத் திருவதிகைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[106] பனையும், தெங்கும் சேர்ந்து பயிரிடப்பட்டதுபோல் வெண்ணிலத்தில் தெங்கும் கமுகும் சேர்ந்து பயிரிடப்பட்டிருக்கின்றன.[107]

இலுப்பைத் தோட்டம்

இலுப்பை நிறைந்திருந்த இடம் இலுப்பைக் கழனி என்று அழைக்கப்பட்டது.[108] செந்தலையில் இறைவனுக்குப் பகல் விளக்கெரிக்க சுவாமிநாதயிளவரசன் என்பவன் இலுப்பைத் தோட்டம் ஒன்றினைத் தானமாகத் தந்தான் என்று கல்வெட்டுத் தெரிவிக்கிறது.[109]

தோப்பு

கோயிலுக்குரிய தோப்புகள் திருத்தோப்புகள் எனப்பட்டன. திருமடைப்பள்ளிப் பண்டாரத்துக்குப் பலாக்காய், வாழைக்காய் உள்ளிட்ட பல காய்களும், பழங்களும் இத்தோப்புக்களினின்றும் கொடுக்கப் பெற்றன.[110]

தனிமரங்கள்

திருக்கோயில் வழிபாட்டிற்குப் பயன்படும் பொருள்தரும் நந்தவனங்கள் தோப்புக்கள் அல்லாமல் தனியே பலவகை மரங்களும் நடும் வழக்கமும் இருந்துள்ளது. ஊரமைக்கும்போது மரங்கள் நடுதல் அக்காலத்துப் பெருவழக்காக இருந்து வந்தது. ஊர்ப் பொதுமரங்கள் ஊர்ச் சபையால் பொதுச் சொத்தாகப் பாதுகாக்கப்பெற்றன. 'இடுமரம் படுமரம்', 'முதுமரம், இளமரம்',[112] வனமரம் என்று இவை பிரித்துப் பேசப்பெற்றன. கல்வெட்டில் நிலத்திற்கு நான்கெல்லை குறிப்பிடப்படும் போது 'இலுப்பை, வாகை, வேம்பு, புங்கு, புளி ஆத்தி, ஆவிரை, கொழுஞ்சி,'[114] 'பனை, மா, தெங்கு,'[115] பலா, மருவு, தமனகம், இருவேலி,'[116] கமுகு,[117] உள்ளி,[118] முதலிய மரங்கள் 'மேனோக்கி நின்ற மரங்களாகக்' குறிக்கப்பெறுகின்றன.

இறைவன் இருப்பிடமும், இருக்கையும்

நந்தவனங்கள் இறைவனின் நிலையான இருப்பிடமாகவும், திருநாட்களின்போது மட்டும் வந்து தங்கிச் செல்லும் இருக்கையாகவும் அரசனின் இருக்கையாகவும் அக்காலத்து விளங்கியிருக்கின்றன. வசந்த உற்சவ நாளில் மாமல்லபுரத்துச் சலசயனத்தேவர் கோயிலுக்குத் தெற்கிலிருந்த திருநந்தவனத்தில் எழுந்தருளியிருந்தார். தில்லையில் அம்பலவாணர் திருநாட்களிலும் 'திருவசந்தன் திருநாளிலும்' அங்குள்ள குலோத்துங்க சோழன் திருத்தோப்பில் எழுந்தருளியிருந்தார்.[119] எதிரிலிச்சோழன் திருநந்தவனம் பிள்ளையார் சிவபாதசேகரன் சித்தத்துளாய்ப் பெருமாள் எப்போதும் அமர்ந்திருக்கும் இருப்பிடமாக இருந்தது.[120]

கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் வரும் நந்தவனம் பற்றிய குறிப்புகளைத் தொகுத்துப் பார்க்கின்றபொழுது இந்நந்தவனங்கள் இலக்கியங்கள் பலவற்றிற் குறிக்கப்பெறுவதுபோல அரசர், மேன்மக்கள், முதலானோர் பொழுதுபோக்கும் இளமரக்காக்களாகவோ, உத்தியானங்களாகவோ பயன்படவில்லை என்ற செய்தி குறிப்பிடத்தக்கது. எனினும் நந்தவனத்தில் அரசன் வந்து தங்கியிருந்ததாகவும் ஒரு குறிப்பு கிடைக்கின்றது. சுந்தரசோழ பாண்டியன் 'மாடக் குளக்கீழ் மதுரையின் வடபக்கத்தில் பசலிருக்கையாகிய நந்தவானம் புத்தனில் சித்திர கூடத்து' அமர்ந்து திருவமிர்து செய்தான் என்று திருவாலீஸ்வரம் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.[121]

கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்பெறும் நந்தவனம் பற்றிய குறிப்புக்களே இங்கு தொகுத்துக் கட்டுரை வடிவில் தரப்பெற்றுள்ளன. இக்குறிப்புகளை காலவாரியாகப் பிரித்துப் பார்க்கும்போது வேறு சில உண்மைகள் புலப்படலாம். இம்முயற்சி இங்கு மேற்கொள்ளப் பெறவில்லை. ஆனுல் அடிக் குறிப்புகளில் ஒவ்வொன்றின் காலமும், இருக்கும் இடமும் குறிக்கப்பெற்றுள்ளன.

---

1 S. I. I. Vol. XIX No. 25 — முதல் பராந்தகன்-909 AD-திருவாடுதுறை
2 ,, XIX No. 25 — முதல் பராந்தகன்-909 AD-திருவாடுதுறை
3 ,, VIII No. 55 — கோப்பெருஞ்சிங்கன்-16வது ஆட்சியாண்டு -சிதம்பரம்
4 ,, XIX No. 25 — முதல் பராந்தகன்-909 AD-திருவாடுதுறை
5 ,, VIII No 677 — பிற்காலச் சோழர்காலம்
6 ,, XIX No. 393 — உத்தமசோழன்-985 AD-திருமெய்ஞ்ஞானம்
7 A R E 236 of 1921/22 — 1537 AD-திருவல்லம்
8 S. I. I. Vol XI No. 516 — கோவிராஜகேசரிவர்மர்-4வது-திருவரங்கம்
9 A R E 215 of 1926 — பார்த்திபேந்திரன்-பிரமதேசம் வட ஆர்க்காடு மாவட்டம்
10 S I. I. Vol. VIII No 151 — குலோத்துங்கன் . . . ? – திருவண்ணுமலை
11 ,, XIX 344 — முதல் பராந்தகன்–921 AD–திருவிடைமருதூர்

12 திருவாலங்காட்டுச் செப்பேடு — முதல் இராசேந்திரன் S.I.I. Vol. III part III
13 S. I. I. Vol. XIV No. 229 — வல்லபதேவர்-11வது-குருவித்துறை
14 ,, XIX No. 357 — உத்தமசோழன்-1 வது-கோயம்புத்தூர்
15 ,, VIII No. 640 — கோப்பரகேசரிபன்மர் . . . ? - 4வது-நங்கவரம்
16 ,, IV No. 512 — இராஜேந்திரன் III - 7வது திருவரங்கம்
17 ,, IX No. 127 — முதல் இராஜேந்திரன் - 5வது-காஞ்சிபுரம்
18 ,, VIII No. 56 — கோப்பெருஞ்சிங்கன்-16வது-சிதம்பரம்
19 ,, XIV No. 85 — சோழன் தலைகொண்ட வீரபாண்டியன்-9வது -கீழ்மாத்தூர்
20 ,, VIII No 640 — கோப்பரகேசரிவர்மர் . . . ? - 4வது-நங்கவரம்
21 ,, IV No. 423 — பிற்காலச்சோழர்காலம் திருவானைக்காவல்
22 ,, III part I No. 15 — முதல் இராஜேந்திரன்-29-மேல்பாடி
23 யாவரும்கேளிர் — டாக்டர் இரா. நாகசாமி-பக். 146-147
24 S. I. I. Vol. V No. 990
25 ,, VIII No 640 — கோப்பர கேசரிவர்மன் . . ? - 4வது-நங்கவரம்
26 ,, V No 411
27 ,, VIII No. 753
28 ,, III part III No. 86 — மூன்றும் குலோத்துங்கன்-9வது-சிதம்பரம்
29 ,, VIII No. 333 — கோப்பெருஞ்சிங்கன் - திருவதிகை
30 ,, IV No. 498 — போசளவீரராமநாததேவர்-திருவரங்கம்
31 ,, XIX No 290 — முதல்பராந்தகன் 11வது லால்குடி
32 ,, VIII No. 151 — குலோத்துங்கன் . . ? - திருவண்ணாமலை
33 ,, VIII No. 689 — பிற்காலச்சோழர் காலம்
34 ,, XIV No. 238 — வல்லபதேவர்-17வது-திருப்பத்தூர்
35 ,, IV No 512 — இராஜேந்திரன் III – 2வது-திருவரங்கம்
36 ,, VIII No. 56 — கோப்பெருஞ்சிங்கன்-16வது-சிதம்பரம்
37 ,, III part III No. 68 — முதல்குலோத்துங்கன்-5வது-காஞ்சிபுரம்
38 ராயகோட்டைசெப்பேடுகள் — ஸ்கந்தசிஷ்யன்காலம்-பல்லவர் செப்பேடுகள்
39 காசாக்குடி செப்பேடு வரி 131 — இரண்டாம் நந்திவர்மன்-பல்லவர்செப்பேடுகள்
40 S.I.I. Vol. III part II No 86 — மூன்றும் குலோத்துங்கன்-9வது சிதம்பரம்
41 ,, XIV No. 132 — சுந்தரசோழபாண்டியன்-மன்னார்கோயில்
42 ,, XIX No. 62 — முதல் பராந்தகன்-3வது உடையார்குடி
43 ,, IV No 362 — தேவராயர்-விஜயநகரம்-காஞ்சிபுரம்
